# பார், பார்

கருவில் இருந்து வந்தவுடன் ஒரு பார்வை

வாழ்க்கைப் பாதையில் நடக்கும்  போது ஒரு பார்வை

நீ வந்த பாதையினைத் திரும்பிப்பார்

அதில் நீ செய்த தவறுகளை திருத்தப் பார்

திருந்த முடியாவிட்டால்  சிந்திக்கவாவது  பார்

உன்னால் சிந்திக்க முடியாவிட்டால் எழுதப் பார்

எழுத  முடியாவிட்டால் வாசிக்கப் பார்

வாசிக்க நேரமில்லாவிட்டால் மற்றவர் சொல்வதைப் பகிரப் பார்.

அதுவும் முடியாவிட்டால் கண்களை மூடி  தியானிக்கப் பார்

அதுவும்  முடியாவிட்டால் மற்றவரின் நல்ல செயலினைப் பார்

அதில் இருந்து கற்று பிறருக்காக வாழப் பார் .

அதுவும் முடியாவிட்டால் உன் மூச்சை இழுத்து விடப்பார்

அதுவும் முடியாவிட்டால் நீ இந்த உலகை விட்டே போய் விடு!

****